சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 85/2022

பெயர் திருமதி. அந்தோணியம்மாள் நாள். 11.08.2025

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் நான்தான் விவரங்கள் கூறினேன். நான் புல எண்.166/1க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட புல எண்ணில் கண்ட சொத்து எனக்கு தான் உரிமை என விளம்புகை செய்து நிரந்தர உறுத்துக் கட்டளை கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புல எண் 166/1 எனக்கு தான் உரிமை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இன்னாசியப்பா மற்றும் பாபு ஆகியோரிடமிருந்து பெற்ற கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் தான் வா.த.சா.ஆ.2 என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் புல எண்.162/1ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 166/1 என்ற புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புல எண் 166/1– யை நான் அனுபவம் செய்து வருவதற்கான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ. 7 மற்றும் 8ல் புல எண் 166/1 குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2) உண்மையில் வழக்குச் சொத்தை நான் அனுபவித்திருந்தால், என் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ராயப்பன் என்பவர் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ராயப்பனின் தம்பிதான் இன்னாசியப்பா என்றால் சரிதான். இன்னாசியப்பாவுக்கு ஒரே மகன் பாபு என்று சொன்னால் சரிதான். பாபுவின் மனைவிதான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2 மற்றும் 4 பிரதிவாதிகள் பாபுவின் பிள்ளைகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பாபுவின் பேரன் என்று சொன்னால் சரிதான். புல எண். 166/1 பாபுவின் பூர்வீக

சொத்துக்கள் என்றால் சரிதான். புல எண் 166/1–ல் கண்ட சொத்தை பாபு உயிருடன் உள்ளவரை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எங்களுக்கு விற்கும்வரை அவர் அனுபவம் செய்து வந்தார். அதன் பிறகு நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். புல எண் 166/1 –ற்கு பட்டா எண்.567 என்று சொன்னால் சரிதான். அந்த பட்டா பாபு பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். பாபு இறந்த பின்பு அவருடைய வாரிசுகள்தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல.

3) பாபுவின் மகள் ஆரோக்கியமேரி என்றாலும், அவருடைய மகன்தான் 3ம் பிரதிவாதி என்று சொன்னாலும் சரிதான். பாபு இறந்தபிறகு சட்டப்படி வாரிசுகள் என்னும் முறையில் பிரதிவாதிகள் தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு அவர்களது பாகத்தை விடுதலை ஆவணம் மூலம் விடுதலை செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு 4ம் பிரதிவாதி தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வழக்குச் சொத்தில் உரிமை உள்ளதால்தான் 4ம் பிரதிவாதிக்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு 4ம் பிரதிவாதி தான் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் வழக்குச் சொத்திற்கு தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். நாங்கள் உண்மையில் வழக்கச் சொத்தை அனுபவம் செய்திருந்தால் தீர்வை செலுத்தியிருப்போம் என்றால் சரியல்ல. கிரய ஆவணத்தில் புல எண் தவறாக எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு எந்த வருடம் தெரிய வந்தது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. புல எண் 162/1 ஏ சொத்தும், பாபுவின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். பாபு புல எண். 162/1ஏ – வை தான் என் கணவருக்கு கிரயம் கொடுத்தார் என்றாலும், புல எண். 166/1 கிரயம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

4) புல எண்.166/1ல் எனக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரய ஆவணத்தில் புல எண் தவறாக எழுதப்பட்டுள்ளது என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள், 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. அதே போல் பிரதிவாதிகள் எங்களுக்கு ஆவணத்தை திருத்தி கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என்றாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளிடம் சொத்தை அபகரிக்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.